# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அன்னூர்

08.07.2025 அ.வ.எண்.327/2023 PW–1

| | |
|---|---|
| பெயர் | ராமலிங்கம் |
| த.பெ. | பழனிச்சாமி |

**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

க.ச.எண். 700/3D, 700/4 இரண்டும் எனக்கு என் சகோதரனுக்கும் கிரையப்படி பாத்தியம் என்றால் சரிதான். அந்த பூமியின் FMB பார்த்துள்ளேனா என்றால் இல்லை. க.ச.எண். 700/5 வண்டித் தடம் என்று உட்பிரிவாகியுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அது அரசு வண்டித் தடம் என்று உட்பிரிவாகியுள்ளது என்று சொன்னால் கிழமேலாக ஆகியுள்ளது ஆனால் அது க.ச.எண். 700/5 ஆ என்று எனக்கு தெரியாது. க.ச.எண். 700/1B அரசாங்கம் எங்களுக்கு கொடுத்த கண்டிசன் பட்டா என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது க.ச.எண். 700/1B ற்கான பட்டா என்றால் சரிதான். (**அந்த க.ச.எண். 700/1B ற்கான பட்டா சான்று நகல். பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) க.ச.எண். 700/1B மற்றும் க.ச.எண். 700/5 ம் என் தனிப்பட்ட சொத்து அல்ல என்றால் எனக்கு அதில் உரிமையுள்ளது. நான் இந்த சொத்துக்களை பொருத்து எந்த பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் எனக்கு புரியவில்லை.

க.ச.எண். 700/1B மற்றும் க.ச.எண். 700/5 ஆகிய சொத்துக்களை பொருத்து நாங்கள் எங்கள் குடும்பத்திற்குள் செய்து கொண்ட பாக பாத்திய விடுதலை பத்திரமான வா.சா.ஆ.2 ன் அடிப்படையில் தான் உரிமை கோருகிறேன் என்று சொன்னால் சரிதான். அந்த பத்திரத்தில் இந்த சொத்துக்கள் எங்களுக்கு பூர்வீகப்படி பாத்தியம் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பூர்வீகப்படி பாத்தியப்பட்டது என்று சொல்வதற்கு என் தந்தை அல்லது என் பாட்டனார் பெயரிலோ ஏதாவது ஆவணங்கள் இருப்பதாக நீதிமன்றத்தில் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த க.ச.எண். 700/1B மற்றும் க.ச.எண். 700/5 ஆகிய சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் தவறு. அந்த இரண்டு சொத்துக்களும் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் தவறு.

நீதிமன்றத்தில் இருந்து பூமியினை அளக்க வழக்கறிஞர் ஆணையாளர் வந்திருந்தார். அந்த சமயத்தில் நான், எதிர்தரப்பினர் மற்றும் இரு தரப்பு

வழக்கறிஞர்களும் இருந்திருந்தோம் என்று சொன்னால் சரிதான். வழக்கறிஞர் ஆணையாளர் எங்கள் அனைவரின் முன்னிலையில் இந்த தடத்தினை அளந்திருந்தார் என்று சொன்னால் சரிதான். அவர் நீதிமன்றத்தில் அதை பொருத்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கோடு சேர்த்து இதன் எதிர் தரப்பினர் என் மேல் மற்றொரு வழக்கு தாக்கல் செய்து அது இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையாளர் ரங்கராஜ் தாக்கல் செய்த அந்த வழக்கில் தான் பூமியினையும் தடத்தினையும் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் நான் தான் மனு செய்தேன். அவ்வாறு சொல்வது தவறு என்றும் ரங்கராஜ் தான் அந்த வழக்கில் அந்த மனுவினை தாக்கல் செய்திருந்தார் என்றால் தவறு. அந்த வழக்கில் வழக்கறிஞர் ஆணையாளர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் அதனுடன் அவர் தாக்கல் செய்த ஆவணங்களை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான்.

அந்த தடத்தின் தென்கோட்டு பகுதியில் சிறிது கற்கள் நட்டு அதில் பாதி குழி தோண்டியும், சிலது நட்டும், சிலது நடாமலும் இருந்தது என்று சொன்னால் நாங்கள் நட்டதை அவர்கள் பிடிங்கிவிட்டார்கள். அந்த கற்கள் எங்கு நடப்பட்டுள்ளது என்பதை வழக்கறிஞர் ஆணையாளர் அவரது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அந்த அறிக்கையினை அந்த இடத்தில் வைத்து நான் பார்த்தால் தான் என்னால் சொல்ல முடியும். அந்த அறிக்கையில் கண்டுள்ளது போல் தான் ஏற்கனவே கற்கள் இருந்ததா என்றால் வழக்கறிஞர் ஆணையாளர் தான் நட்டார். அவ்வாறு நான் சொல்வது பொய் என்றும் வழக்கறிஞர் ஆணையாளர் எந்த கற்களையும் நடவில்லை என்றால் தவறு. நான் தடத்தினை ஆக்கிரமித்து அதன் தெற்கோட்டில் கம்பிவேலி போட முயன்றதால் தான் இந்த வழக்குமூலம் ஏற்பட்டது என்று சொன்னால் தவறு.

க.ச.எண். 700/1A மற்றும் க.ச.எண். 700/2 ஆகிய இரண்டுமே தடம் என்று சொன்னால் சரிதான். அந்த இடம் அரசின் பொறம்போக்கு தடம் என்றால் அது தடம். எனக்கு காலை எண்கள் சரியாக தெரியாது. அந்த தடத்தினை பொருத்து நான் தொந்தரவு செய்யவோ ஆக்கிரமிப்பு செய்யவோ எனக்கு உரிமை இல்லை என்றால் அந்த இடத்தில் இருந்து சிறிது வடக்கே கற்கள் தள்ளி நடவேண்டும். அது எங்களுடைய நிலம். நான் சொன்னது போல் க.ச.எண். 700/1A மற்றும் 700/2 ஆகிய இரண்டுமே அரசு பொறம்போக்கு நிலம் என்றும் அதில் எங்களுக்கு உரிமையில்லை என்றால் க.ச.எண். 700/1A தான் தடம், க.ச.எண். 700/2 எங்கள் பூமி. க.ச.எண். 700/2 எங்களுடைய சொத்து என்பதற்கோ அது எங்ளுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக நான் ஏதேனும் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் பொய் சொல்கிறேன் என்றும், அதுபோல் ஆவணங்கள் நான் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

க.ச.எண். 700/3D, 700/4 ஆகிய சொத்துக்களை பொருத்து பிரதிவாதிகளான ரங்கராஜ் வகையறா எங்களை எந்த தொந்தரவும் செய்திடவில்லை என்றால் சரிதான். எங்களுக்கு தடத்தினை பொருத்து மட்டும் தான் பிரச்சனை. க.ச.எண். 700/1A நிலத்தின் தென்பகுதியினை ஆக்கிரமிக்க முயற்ச்சி செய்தேன் என்று சொன்னால் தவறு. க.ச.எண். 700/5 நெ.காலையில் உள்ள தடத்தில் பிரதிவாதிகள் ரங்கராஜ் வகையறாவிற்கு உரிமையுள்ளது என்றால் தவறு. உரிமை இல்லை. க.ச.எண். 700/5 அரசு வண்டித்தடம் என்பதால் பிரதிவாதிகளுக்கும் அந்த இடத்தினை சுற்றியுள்ள பட்டாதாரர்களுக்கும் அதில் உரிமையுள்ளது என்று சொன்னால் தவறு. க.ச.எண். 700/1B கண்டிசன் பட்டா என்பதால் எனக்கு அந்த சொத்தில் எவ்விதமான தனிப்பட்ட உரிமையும் இல்லை என்றால் தவறு. எங்களுக்கு கொடுத்த கண்டிசன் பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் நான் கோரியுள்ளது போல் எங்கள் சொத்துக்களை பிரதிவாதிகள் மனையிடங்களாக பிரித்து விற்க வேண்டி விலைக்கு கேட்டதாகவும், அதனை நாங்கள் மறுத்ததால் தான் பிரதிவாதிகள் எங்கள் பூமிகளை தொந்தரவு செய்தார்கள் என்று சொல்லிய விவரங்கள் எங்கள் கற்பனை என்றும் அவ்வாறு எந்த சம்பவங்களும் நடைபெறவில்லை என்றும், அது வழக்கு மூலத்திற்காக புனையப்பட்ட சங்கதிகள் என்றால் தவறு. அதனால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் தவறு.

Sd/-V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.